## 8. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

### 8.1. பாடநூல்கள் அச்சடிப்பு

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் 1970ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்கழகம் கீழ்க்குறிப்பிட்ட பாட நூல்கள் மற்றும் கையேடுகளை அச்சடித்து வழங்கி வருகிறது:

- மாநிலப் பாடத் திட்டப் பள்ளிகளில் 1-12 வகுப்புகளுக்கான பாடநூல்கள்
- மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ-இந்திய பள்ளிகளுக்கான 10ஆம் வகுப்பு பாட நூல்கள்
- சிறுபான்மை மொழி பயிலும் மாணவர்களுக்கு 10ஆம் வகுப்பு வரை அனைத்துப் பாடநூல்கள்; +1, +2 மாணவர்களுக்கு மொழி நூல்கள்; 12ஆம் வகுப்புவரை குறிப்பு நூல்கள்
- எல்.கே.ஜி. முதல் 12ஆம் வகுப்புவரையிலான அறிவியல் தமிழ் பாட நூல்கள்
- ஆதி திராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைகள் மூலம் நடத்தப்பெறும் பள்ளிகளில் 10 மற்றும் +2 வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி நூல்கள்
- தொழிற்படிப்பு நுழைவுத் தேர்வுக்கு வினா வங்கி, மாதிரி வினா ஏடு, கையேடு
- ஆசிரியர் கல்வி பட்டயப்படிப்பிற்கான வழிகாட்டி நூல்கள்

### 8.2. பாடநூல்களின் விநியோகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகத்தின் 21 வட்டார அலுவலகங்கள் மூலம் இலவச மற்றும் விற்பனை பாடநூல்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. கல்வித்துறை மற்றும் பல்வேறு நலத்துறைகளுக்கான பாடநூல்கள் வட்டார அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து சம்மந்தப்பட்ட துறைகளுக்கு பள்ளிகள் திறக்கும் முன்னரே வழங்க ஏற்பாடுகள் செய்யப்படுவதால், பள்ளிகள் திறந்தவுடன் மாணவர்களுக்கு பாடநூல்கள் எளிதாக கிடைக்கின்றன. விற்பனை பிரதிகளை பொறுத்தமட்டில் தமிழ்நாடு பாடநூல் கழகம், தமிழ் நாட்டிலுள்ள 42 மாவட்ட கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலமாக மொத்த விற்பனையும், 2000 தனியார் விற்பனை நிலையங்கள் மூலம் சில்லறை விற்பனையும் செய்கிறது. இதனால், அனைத்து பள்ளிகளும், பள்ளிகள் திறக்கும் முன்னரே மாணவர்களுக்கு தேவையான அனைத்துப் பாடநூல்களையும் பெறுவது உறுதிப்படுத்தப்படுகிறது.

சென்னையில் உள்ள நிர்வாக அலுவலகத்தில் சிறப்பு விற்பனை நிலையம், அனைத்து வேலை நாட்களிலும் செயல்பட்டு வருகிறது.

### 8.3. இலவசப் பாடநூல்கள்

தற்போது ஊராட்சி ஒன்றிய, அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், 6,7,8 ஆம் வகுப்புகளில் பயிலும் மதிய உணவு உண்ணும் மாணவர்களுக்கும், இலவசப் பாடநூல்களை பாடநூல் கழகம் அச்சிட்டு வழங்கி வருகிறது.

இப்பாடநூல்களுக்கான உற்பத்தி செலவு தமிழ்நாடு அரசால் ஈடு செய்யப்படுகிறது. இது தவிர ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் போன்ற துறைகள் மூலமும் இலவச பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது. 2005-2006ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை படிக்கும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

### 8.4. குறிப்பேடுகள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், அரசுத்துறைகளுக்காகவும், மற்றும் வெளிச் சந்தை விற்பனைக்காகவும் குறிப்பேடுகளை தயாரித்து வெளியிடுகிறது. வெளிச்சந்தை விற்பனைக்கென வழக்கமான குறிப்பேடுகளை தயாரிப்பதுடன், மலிவு விலையில் நல்ல தரமான தாளில் லேமினேஷன் செய்யப்பட்டு, பல வண்ணங்களையுடைய மென்மையான மேல் அட்டைகளை கொண்ட குறிப்பேடுகளையும் தமிழ் நாட்டுப் பாட நூல்கழகம் விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளது.

## 9. பொது நூலகங்கள்

### 9.1. புதிய நூலகங்கள் திறத்தல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மைய நூலகம் உள்ளது. மக்கள் தொகை 5000க்கும் அதிகமாக உள்ள கிராமங்களில் கிளை நூலகங்கள் திறக்கப்படுகின்றன. மக்கள் தொகை 1000-5000 உள்ள கிராமங்களில் கிராமப்புற நூலகங்கள் திறக்கப்படுகின்றன. மக்கள் தொகை 1000க்கும் குறைவாக உள்ள கிராமங்களில் பகுதிநேர நூலகங்கள் திறக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள நூலகங்கள்:

| | எண்ணிக்கை | |
|---|---|---|
| மாநில மைய நூலகம் | 1 | |
| மாவட்ட மைய நூலகங்கள் | 29 | |
| கிளை நூலகங்கள் | 1568 | |
| நடமாடும் நூலகங்கள் | 12 | |
| கிராமப்புற நூலகங்கள் | 1492 | |
| பகுதி நேர நூலகங்கள் | 649 | |
| மொத்தம் | 3751 | |

| | |
|---|---|
| உறுப்பினர்களின் எண்ணிக்கை | 34,92,326 |
| புத்தகங்கள் எண்ணிக்கை | 5,12,93,763 |
| வாசகர்கள் எண்ணிக்கை | 4,55,94,704 |